**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 137 / 2025**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW22 |
| | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | Tmt. Shanthi (I.O.) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 12th day of March, 2026.

**(Accused is present)**

சாட்சி சத்தியப்பிரமானம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை :**

நேரம் 13.15 மணி

நான் தற்போது ஈரோடு மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும்கண்காணிப்புத்துறையில் துணை காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் ஊத்துக்கோட்டை உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளராக பணியில் இருந்தபோது 06-01-2025 அன்று திருமதி. நீலாவதி என்பவர் ஊத்துக்கோட்டை

அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் அளித்த புகார்மனுவை பெற்று ஊத்துக்கோட்டை அனைத்து மகளிர் காவல் ஆய்வாளர் திருமதி. தமிழ்செல்வி, ஊத்துக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண். 1/2025 சட்டப்பிரிவுகள் 115(2), 64 of BNS ன் கீழ் பதிவு செய்த வழக்கை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். அதன்பிறகு 07-01-2025 அன்று அதிகாலை சுமார் 3.00 மணியளவில் திருவள்ளூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சென்று பாதிக்கப்பட்ட பூங்கொடி என்ற பெண்ணிடமும், அகிலா என்ற பெண்ணிடமும் விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலங்களை பதிவு செய்தேன். பாதிக்கப்பட்ட பெண் உடுத்தியிருந்த ஆடைகளை அகிலா அடையாளம் காட்டி எடுத்து கொடுத்ததை படிவம் 91 ல் கைப்பற்றி நீதிமன்றம் அனுப்பி வைத்தேன். மேற்படி படிவம் 91 **அ.த.சா.ஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சான்றுபொருட்கள் தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படுகிறது. பாதிக்கப்பட்ட பெண் அணிந்திருந்த உடைகள் மஞ்சள், சிவப்பு, பச்சை வட்டம்போட்ட நீல நிற புடவை **அ.சா.பொ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சிமெண்ட் கலர் உள்பாவாடை **அ.சா.பொ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சந்தன கலர் ஜாக்கெட் **அ.சா.பொ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சம்பவயிடமான சென்னாங்காரணி கிராமம் ஏரிக்கரை சென்று சாட்சிகள் குணசீலன் மற்றும் சம்பத் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து வாக்குமூலங்களை பதிவு செய்தேன். பார்வை மகஜர் **அ.த.சா.ஆ.17** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.18** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் சாட்சிகள் நீலாவதி, சேகர், விக்னேஷ், ஏழுமலை ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். பாதிக்கப்பட்ட பெண்ணிடம் நடத்திய விசாரணையிலிருந்தும், சாட்சிகளின் விசாரணையிலிருந்தும், பாதிக்கப்பட்ட பெண் இந்து ஆதிதிவராவிடர் என்றும், எதிரி ராஜா பிற வகுப்பை சேர்ந்தவர் என்று தெரியவந்ததாலும், இந்த வழக்கை அன்றே சட்டப்பிரிவு 115(2), 64 of BNS ல் இருந்து 115(2), 64, 87 of BNS, Sec. 3(1)(w)(i), 3(2)(v) of SC/ST Act என

சட்டப்பிரிவு மாற்றம் செய்தேன். சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை **அ.த.சா.ஆ.19** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கு வன்கொடுமை வழக்கு என்பதால் திருவள்ளூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் என்னை புனல் விசாரணை அதிகாரியாக நியமித்து செயல்முறை ஆணை எண் C.No. 08/SJ&HR/Tvlr/2025 தேதி 07-01-2025 ன் படி என்னை நியமித்தார். மேற்படி செயல் முறை ஆணை **அ.த.சா.ஆ.20** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கில் தலைமறைவு குற்றவாளியை கைது செய்வதற்காகவும் எனக்கு உதவி செய்வதற்காகவும் திரு.தேவராஜ், ஊத்துகோட்டை காவல் ஆய்வாளர் மற்றும் திருமதி தமிழ்செல்வி காவல் ஆய்வாளர் ஊத்துகோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையம் ஆகியோர்களை உதவி புலன் விசாரணை அதிகாரிகளாக நியமித்து செயல் முறை எண் C.No. 02/DSP-UKT/2025 தேதி 07-01-2025 ன் படி நியமித்தேன். மேற்படி செயல்முறை ஆணை **அ.த.சா.ஆ.21** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன்பிறகு திரு. மதன்குமார், வட்டாட்சியர் ஊத்துக்கோட்டை வட்டம் அவர்களிடம் பாதிக்கப்பட்ட பெண் மற்றும் எதிரி ராஜா ஆகியோரது சாதி சான்றிதழ் மற்றும் உண்மை தன்மை கேட்டு வேண்டுகோள் கடிதம் அனுப்பினேன். பாதிக்கப்பட்ட பெண் இந்து ஆதிதிராவிடர் என்றும், எதிரி ராஜா இந்து வன்னியர் என்றும் அவரிடம் சாதி சான்றிதழ்கள் மற்றும் சாதி குறித்த உண்மை தன்மை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் உதவி புலன் விசாரணை அதிகாரிகள் திரு.தேவராஜ், ஊத்துகோட்டை காவல் ஆய்வாளர் மற்றும் திருமதி தமிழ்செல்வி காவல் ஆய்வாளர் ஊத்துகோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையம் அவர்கள் எதிரியை இரவு 22.00 மணிக்கு ஊத்துக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வைத்து என்னிடம் ஆஜர் செய்தனர். எதிரிக்கு மனிதாபிமான அடிப்படையில் போதுமான உணவு கொடுத்த பின்னர் உச்சநீதிமன்ற கட்டளைகளை நிறைவேற்றி எதிரியின் உறவினர்களுக்கு தகவல் தெரிவித்து, கைதுக்கிற்கான காரணங்களை எடுத்துகூறி 07-01-2025 அன்று 22.15 மணிக்கு முறைப்படி கைது

செய்யப்பட்டார். எதிரி தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலத்தை 22.30 மணிமுதல் 23.00 மணிவரை ஊத்துக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வைத்து சாட்சிகள் திரு. ஞானவேலு, கிராம நிர்வாக அலுவலர் சென்னாகாரணி கிராமம் மற்றும் திரு. ரகு, கிராம உதவியாளர் சென்னாகாரணி கிராமம் ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே அ.த.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் அடிப்படையில் எதிரியிடமிருந்த லாவா செல்போன் மற்றும் எதிரி பயன்படுத்திய TN 20 CQ 8934 Platina மோட்டார் சைக்கிளையும் ஊத்துகோட்டை மகளிர் நிலையத்தில் வைத்து அதே சாட்சிகள் முன்னிலையில் 23.30 மணிக்கு கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியும், படிவம் 91 ஐ நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். படிவம் 91 **அ.த.சா.ஆ.22** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தொடர்ந்து எதிரி ராஜா சம்பவத்தின்போது அணிந்திருந்த நீலநிற அரைக்கால் டவுசர், ரோஸ் நிற டீ சர்ட் மற்றும் வெள்ளை நிற பேண்ட் ஆகியவற்றை எதிரி ராஜா குடியிருந்து வரும் சென்னாகாரணி கிராமத்தில் உள்ள அவரது வீட்டில் பின்புறம் மறைத்து வைத்திருந்ததை 08-01-2025 அன்று அதிகாலை 00.30 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியும் படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மேற்படி படிவம் 91 **அ.த.சா.ஆ.23** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரியை மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், ஊத்துக்கோட்டை அவர்கள் முன்பாக ஆஜர் செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளின் வாக்குமூலங்களை உடனே பதிவு செய்தேன். அதன்பிறகு சாட்சிகள் தினகரன், பிரகாஷ், அரமாத்தா ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். 10-01-2025 அன்று பாதிக்கப்பட்ட பெண் சாட்சிகள் விக்னேஷ், தினகரன், பிரகாஷ் ஆகியோர்களின் சட்டப்பிரிவு 183(5) of BNSS ன் படி நீதித்துறை நடுவர்கள் முன்பு வாக்குமுலங்கள் பதிவு செய்வதற்கு வேண்டுகோள்

கடிதம் பின்னர் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். 23-01-2025 அன்று டாக்டர் வினோதினி உதவி பேராசிரியர் பெண்ணியியல் மற்றும் மகப்பேறியியல் பிரிவு திருவள்ளூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை அவர்களை விசாரணை செய்து பாதக்கப்பட்ட பெண்ணிற்கு மருத்துவ பரிசோதனை செய்த விவரங்களை வாக்குமூலமாக பதிவு செய்து கொண்டேன். அன்றே Smiriti Banerji அறிவியல் அலுவலர் (உயிரியியல் பிரிவு) தடயஅறிவியல் துறை சென்னை அவர்களை விசாரணை செய்து பாதிக்கப்பட்ட பெண்ணிடமிருந்த சேகரிக்கப்பட்டஸ்லைடுகள் மற்றும் சோதனை குழாய் மற்றும் labial Swab ஆகியவற்றை ஆய்வு செய்து வழங்கிய ஆய்வறிக்கை குறித்து விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் திருமதி. முத்துலட்சுதி தலைமை காவலரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரி ராஜாவிற்கு ஆண்மை தன்மை குறித்து மருத்துவ பரிசோதனை செய்யவேண்டி திருவள்ளூர் அமர்வு நீதிமன்ற கடித எண் 563/2025 நாள் 24-01-2025 ன் படி திருவள்ளூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் பரிசோதனை செய்யப்பட்டது. 25-01-2025 அன்று டாக்டர் நரசிம்மன் தடயவியல் மருத்துவ பேராசிரியர் திருவள்ளூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை அவர்களை விசாரணை செய்து எதிரி ராஜாவின் ஆண்மை தன்மை பரிசோதனை செய்து சான்று வழங்கியது குறித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே திரு. சுந்தரம், தலைமை காலவர் 1270 திரு. தினேஷ் காலவர் 1951 ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். திருவள்ளூர் அமர்வு நீதிமன்ற உத்தரவின்படி சாட்சிகள் விக்னேஷ், தினகரன், பிரகாஷ் ஆகியோர்கள் 27-01-2025 ஆம் தேதி அன்று மாவட்ட உரிமையியல் மற்றும் நடுவர் நீதிமன்றம், ஊத்துகோட்டை அவர்கள் முன்பு ஆஜர் செய்து சட்டப்பிரிவு 183(5) of BNSS ன் படி வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டது. பாதிக்கப்பட்ட பெண் 30-01-2025 ஆம் தேதி நீதித்துறை நடுவர் எண் 1 திருவள்ளூர் அவர்கள் முன்பு ஆஜர் செய்து சட்டப்பிரிவு 183(5) of BNSS ன் படி வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

30–01–2025 ஆம் தேதி திரு. தேவராஜ் ஊத்துக்கோட்டை காவல் ஆய்வாளர், திருமதி. தமிழ்செல்வி காவல் ஆய்வாளர் ஊத்துக்கோட்டை அனைத்து மகளிர் காவல்நிலையம் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். 10–02–2025 அன்று இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட பெண் மற்றும் எதிரி அணிந்திருந்த ஆடைகளை சென்னை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்தேன். 17–02–2025 அன்று திரு. மணிமாறன், Nodal Officer, Bharathi Airtel Limited அவர்களிடம் எதிரியின் Call Detail Records மற்றும் CAF கேட்டு சட்டப்பிரிவு 63(4)(c) of BSA Act ன் படி பதில் அளிக்க வேண்டுகோள் கடிதம் அனுப்பினேன். 18–02–2025 ஆம் தேதி திருமதி. சரண்யா பெண் காவலர் 2369 என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 19–02–2025 அன்று இவ்வழக்கின் சட்டப்பிரிவு 115(2), 64, 87 of BNS, Sec. 3(1)(w)(i), 3(2)(v) of SC/ST Act இல் இருந்து 115(2), 64, 87 of BNS, Sec. 3(1)(w)(i), 3(2)(v), 3(1)(w)(ii) of SC/ST Act ஆக பிரிவு மாற்றம் செய்து பிரிவு மாற்றல அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை **அ.த.சா.ஆ.24** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றே பாதிக்கப்பட்ட பெண் கொடுத்த வாக்குமூலத்திருந்தும், சாட்சிகளின் விசாரணையிலிருந்தும், இவ்வழக்கின் புலன்விசாரணையை முடித்து குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் 115(2), 64, 87 of BNS, Sec. 3(1)(w)(i), 3(2)(v), 3(1)(w)(ii) of SC/ST Act ன் கீழ் தாக்கல் செய்தேன். 21–03–2025 தேதியிட்ட பாதிக்கப்பட்ட பெண் மற்றும் எதிரி அணிந்திருந்த உடைகளை பரிசோதனை செய்ததற்கான குருதி வடிநீரியியல் அறிக்கை நீதிமன்றத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளது. மேற்படி 21–03–2025 தேதியட்ட SER/CHE/35/2025 அறிக்கை **அ.த.சா.ஆ.25** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சிகள் என்னிடம் கூறியவாறு நான் வாக்குமூலங்களை பதிவு செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**நேரம் 15.10 மணி**

இந்த வழக்கில் புகார் கொடுக்கப்பட்ட தேதி 06–01–2025 இரவு 23.45 மணி என்றால் புகாரில் புகாரின் நேரம் குறிப்பிடவில்லை. முதல் தகவல் அறிக்கையில்

23.45 என்பது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த நேரமாகும். புகார் பெறப்பட்ட தேதியில் பெறப்பட்ட அதிகாரி புகார் பெறப்பட்ட நேரம் குறித்து புகாரின் அடியில் குறிப்பு எழுதுவது வழக்கம் என்றால் புகார் மனுவில் குறிப்பு இல்லை வழக்கு பதிவு செய்பட்ட நேரம் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. புகார் பெறப்பட்ட நேரமும் பதிவு செய்யப்பட்ட நேரமும் ஒன்று தான் என்றால் இல்லை. எந்த தேதியல் எந்த நேரத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்று எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் 06-01-2025 அன்று இரவு சுமார் 11.00 மணியளவில் புகார் கொடுக்கப்பட்டது என்று தெரியவந்தது. புகாரில் உள்ள விவரங்களின் படி சம்பவம் நடந்த நேரம் 06-01-2025 அன்று மாலை சுமார் 4.00 மணி என்றால் சரிதான். ஆனால்புகார் இரவு 11.00 மணிக்கு காலதாமதமாக கொடுக்கப்பட்டது பற்றி முதல் தகவல் அறிக்கையில் காரணம் ஏதாவது குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால இல்லை. முதல் தகவல் அறிக்கையில் தகவல் அளித்தவருக்கு அதனுடைய நகல் கொடுக்கப்பட்டதற்கான ஒப்புகை பெறப்பட்டுள்ளதா என்றால் ஒப்புகை பெறப்படவில்லை மேற்கண்ட வழக்கு பாலியல் வழக்கு என்பதால் பாதிக்கப்பட்ட பெண்ணின் கண்ணியம் கருதி புகார் அளிக்கப்பட்ட புகார்தாரருக்கு வழக்கு பதிவுசெய்யப்பட்ட விவரம் கூறப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கையின் நகல் கொடுக்கப்படவில்லை. இந்த வழக்கில் புகார் அளித்த நீலாவதி பாதிக்கப்பட்ட பெண் கிடையாது என்றாலும் பாதிக்கப்பட்ட பெண்ணின் உறவினர் என்றாலும் சரிதான். புகார் அளித்த நீலாவதிக்கும் அவருடைய தாயார் அகிலாவிற்கும் நடந்த சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான். புகாரில் சம்பவம் நடந்த நேரம் மாலை 4.00 மணி என்பது அவருக்கு எப்படி தெரியும் என்ற விவரம் புகாரில் இல்லை என்றால் சரிதான். புகார் அளித்த நபருக்கு அந்த விவரம் அவர்கள் ஊரைச் சேர்ந்த சேகர் மூலமாக தெரியவந்தது என்றால் சரிதான். அதன்பிறகு புகார்தாரர் சம்பவயிடம் சென்று பாதிக்கப்பட்ட பெண்ணான தனது பாட்டியை திருவள்ளூர் அரசு மருத்துவமனையில் சேர்த்த பிறகு முழு விவரங்களையும் அவரிடமிருந்து தெரிந்து கொண்டுள்ளார். புகார் அளித்த நபர் சம்பவத்தில் ஈடுபட்ட நபர் 40 வயது மதிக்கத்தக்க ஒரு நபர் என்று

குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த நபரின் தோராய அங்க அடையாளம் பற்றியோ, உருவ அமைப்பு பற்றியோ எந்த விவரங்களும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பாதிக்கப்பட்ட பெண் வயதான பெண்மணி என்பதாலும் இந்தகைய பாலியல் தாக்குதல் மற்றும் அவர் மீது நடந்த தாக்குதல் அதிர்ச்சியிலிருந்து மீளாமல் இருந்ததாலும் முதலில் எதிரி குறித்த விரிவான விவரங்களை கூற இயலாத நிலையில் இருந்துள்ளார். அதன்பிறகு மருத்துவ முதல் உதவி சிகிச்சைக்கு பிறகு அதிர்ச்சியிலிருந்து தெளிவாகி எதிரி குறித்த விரிவான விவரங்களை புகார்தாரரிடமும், அவரது உறவினர்களிடமும் தெரிவித்துள்ளார். அதிர்ச்சியில் இருந்தார் அவரால் விவரம் கூறமுடியாத நிலையில் இருந்தார் போன்ற விவரங்கள் புகாரில் உள்ளதா என்றால் இல்லை. சம்பவத்தை பற்றி கூறியுள்ளார். சம்பவத்திற்கு பின்பு பாதிக்கப்பட்ட பெண் அழுது கொண்டிருந்ததாக புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பாதிக்கப்பட்ட பெண்மணி புகார் அளித்தவரிடம் சம்பவத்தில் ஈடுபட்ட நபரை பற்றி எந்த விவரமும் தெரிவித்ததாக புகரில் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கு GCR ல் வரக்கூடிய வழக்கு என்றால சரிதான். இந்த வழக்கில் புலன்விசாரணை அதிகாரியாக காவல் துறை ஆய்வாளரே விசாரணை அதிகாரியாக மேற்கொள்ளலாம் என்றால் சரியல்ல. Grave Crime பொறுத்தவரை காவல் துணை கண்காணிப்பாளர் தான் புலன் விசாரணை செய்ய வேண்டும். அதனடிப்படையில் இந்த வழக்கு காவல் ஆய்வாளர் தமிழ்செல்வியால் எனக்கு இந்த வழக்கு விசாரணைக்காக பரிந்துரைக்கப்பட்டதா என்றால் இல்லை. நானாக இந்த வழக்கில் அன்றைய தினத்தில் வழக்கின் விசாரணையை ஏற்றுக்கொண்டேன் என முதல் விசாரணையில் கூறியுள்ளேன் என்றாலும் அதுகுறித்து குறிப்பிட்ட காரணம் ஏதாவது உள்ளதா என்றால் மேற்கண்ட வழக்கு பாலியல் வன்கொடுமை வழக்கு என்பதாலும் வழக்கின் தீவிரத்தை கருதி காவல் கண்காணிப்பாளர் திருவள்ளூர் அவர்கள் இவ்வழக்கை புலன் விசாரணையை என்னை எடுத்துக் கொள்ளுமாறு கூறினார். அவ்வாறு குறிப்பிட்ட வழக்கில் புலன் விசாரணையை குறிப்பிட்ட அதிகாரிகள் மாவட்டத்தில் மேற்கொள்வதற்கு பிரிவு 36A ன் கீழ்

தனியாக ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும், அவ்வாறு எந்த உத்தரவாவது பிறப்பிக்கப்பட்டதா என்றால் இல்லை. புதிய BNS சட்டத்தின் படி எழுத்துப்பூர்வமான உத்தரவு தேவையில்லை. இந்த வழக்கில் புகார் கொடுத்த நபர் பட்டியல் இனத்தை சேர்ந்தவர் என்று குறிப்பிட்டு கூறியுள்ளாரா என்றால் புகாரில் கூறவில்லை. அவருடைய வாக்குமூலத்தை நான் மறுநாள் காலை 3.00 மணியளவில் மருத்துவமனையில் வைத்து பதிவு செய்யதாக முன்விசாரணையில் கூறியுள்ளேன் அவ்வாறு பதிவுசெய்யப்பட்ட புகார்தாரரின் வாக்குமூலத்திலும், பாதிக்கப்பட்ட பெண்ணின் வாக்குமூலத்திலும் அவர்கள் பட்டியல் இனத்தை சேர்ந்தவர்கள் என்று குறிப்பிட்டு கூறியுள்ளார்களா என்றால் புகார்தாரர் தன்னுடைய வாக்குமூலத்தில் தான் ஆதிதிராவிடர் வகுப்பை சேர்ந்தவர் என்று குறிப்பிட்டுள்ளார். புகார்தாரரை நான் மருத்துவமனையில் விசாரணை செய்யவில்லை சம்பவ கிராமமான சென்னாகாரணி கிராமம் சென்று விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்பதை அவரது வாக்குமூலத்திலே குறிப்பிட்டுள்ளேன். அந்த வாக்குமூலத்தில் புகார் அளித்த நபர் நீலாவதி சென்னாகாரணி கிராமத்தை சேர்ந்தவர் என்று எங்கு குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை. நான் சம்பவயிடம் சென்று விசாரணை செய்தபோது அவர் சென்னாகாரணி கிராமத்தில் இருந்தார். மேற்படி புகார் அளித்தவர் சென்னாகாரணி கிராமத்தை சேர்ந்தவர் அல்ல என்றாலும் தண்ணிகுளம் கிராமத்தில் அவருடைய கணவருடன் வசித்து வருகிறார் என்றால் புகார்தாரரின் பிறந்த ஊர் சென்னாகாரணி கிராமம் அவருடைய திருமணத்திற்கு பிறகு அவருடைய கணவருடன் வசித்து வருகிறார். புகார்தாரருக்கு அவருடைய அம்மா அகிலா தகவல் கூறி தான் சம்பவயிடமான சென்னாகாரணி கிராமத்திற்கு வந்துள்ளார் என்றால் சரிதான். புகார் அளித்த நபருடைய அம்மா அகிலாவை நான் என்றைய தேதியில் எங்கு வைத்து விசாரணை செய்தேன் என்றால் 07-01-2025 அன்று காலை சுமார் 3.00 மணியளவில் திருவள்ளூர் அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்து வாக்குமூலம் வாங்கினேன். அதே தினத்தில் நான் பாதிக்கப்பட்ட பெண் பூங்கொடியையும் விசாரித்து வாக்குமூலம் வாங்கினேன் என்றால் சரிதான். நான்

திருவள்ளூர் அரசு மருத்துவமனைக்கு சென்றபோது பாதிக்கப்பட்ட பெண் நன்றாக தூங்கிக்கொண்டிருந்தார். அவர் எழுந்தவுடன் அதிகாலை சுமார் 4.30 மணியளவில் அவரிடம் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மருத்துவ சிகிச்சையில் இருக்கும் ஒருவரிடம் வாக்குமூலம் வாங்குவதற்கு முன்பு அவருக்கு மருத்துவ சிகிச்சை அளித்த மருத்துவரிடம் அவர் வாக்குமூலம் அளிக்கக்கூடிய மன நிலையில் இருக்கிறார் என்பது குறித்து அவரிடம் சான்று பெற்று அல்லது அவர் முன்னிலையில் நான் வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. அப்போது அதிகாலை 4.30 டியூட்டி டாக்டர் இருந்தார். அந்த வாக்குமூலத்தில் பாதிக்கப்பட்ட பெண்ணின் வாக்குமூலத்தில் மருத்துவரின் கையொப்பமோ, பரிந்துரையோ இல்லை என்றால் சரிதான். அந்த நேரத்தில் பணியில் இருந்த மருத்துவர் யார் என்பது குறித்து அவருடைய வாக்குமூலத்தை பதிவு செய்து அவரை இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். பாதிக்கப்பட்ட பெண்மணியை 06-01-2025 மாலை 6.00 மணிமுதல் மருத்துவ சிகிச்சைக்கு சேர்த்து அவருடன் உடன் இருந்தது அ.சா.2 அகிலா என்றால் சரிதான். அந்த அ.சா.2 வாக்குமூலத்திலும் அ.சா.1 போலவே பாதிக்கப்பட்ட பெண்ணை ஒரு நபர் அடித்து வலுக்கட்டாயமாக உடலுறவு கொண்டதாக ஏழுமலை என்பவரிடம் தகவல் கூறியதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். அதே தேதியில் சம்பவத்தில் ஈடுபட்ட நபரின் பெயர் பற்றி அ.சா.1 மற்றும் அ.சா.2 க்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கில் பட்டியல் இனத்தவரை பாதிப்புக்குள்ளாகிய நபர் பிற சமூகத்தை சேர்ந்தவர் என்பதற்கு அ.சா.1 மற்றும் அ.சா.2-ன் வாக்குமூலங்களில் போதுமான விவரங்கள் இல்லை என்றால் சரியல்ல. ராஜா த/பெ. துரைசாமி என்பவர் பிற சமூகத்தை சேர்ந்தவர் என்று எனது விசாரணையில் தெரியவந்தது. அதனடிப்படையில் நான் இந்த வழக்கை எனது புலன் விசாரணையிலிருந்து பட்டியல் இனத்தவருக்கான சிறப்பு விசாரணைக்கு உகந்தது என்று உரிய விசாரணை அதிகாரியை நியமிக்க கோரி மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு விண்ணப்பம் செய்தேனா என்றால் செய்தேன். என் விண்ணப்பத்தின் அடிப்படையில் ஏற்கனவே வழக்கில் புலன்

விசாரணை அதிகாரியாக இருந்த என்னையே மீண்டும் பட்டியல் இன வழக்கு விசாரணை அதிகாரியாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் 07-01-2025 அன்று செயல்முறை ஆணைகள் மூலம் என்னை விசாரணை அதிகாரியாக நியமித்தார் என்றால் சரிதான். அந்த உத்தரவின் அடிப்படையில் நான் என்றைய தினத்தில் பட்டியல் இன விசாரணையை ஆரம்பித்தேன் என்றால் அன்றைய தினமே காலை 10.00 மணிக்கு ஆரம்பித்தேன். பட்டியல் இன வழக்கு புலன் விசாரணை அதிகாரி என்ற முறையில் நான், சாட்சி அகிலா, சாட்சி நீலாவதி, பாதிக்கப்பட்ட பெண்மணி பூங்கொடி ஆகியோரை மீண்டும் விசாரணை செய்து அவர்களிடமிருந்து பட்டியல் இன வழக்கு நடைமுறையின்படி உரிய விவரம் கூறி அவரிடத்தில் நான் எந்த வாக்குமூலமும் பதிவு செய்யவில்லை என்றால் நான் மறுவாக்குமூலம் பதிவு செய்யவில்லை. இந்த வழக்கில் நான் பாதிக்கப்பட்ட பெண்மணி சாட்சிகள் அகிலா மற்றும் நீலாவதி மற்றும் சேகர், ஏழுமலை ஆகியோர் அனைவரும் சென்னாகாரணியில் தான் நிரந்தரமாக வசித்துவந்தார்கள் என்றாலும் ஆஜர் எதிரியும் சென்னாகாரணியில் வசித்து வந்தார் என்றால் நீலாவதியை தவிர மற்ற அனைவரும் சென்னாகாரணி கிராமத்தில் நிரந்தரமாக வசிப்பவர்கள். இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட பெண்மணி புகாரின்படி சம்பவயிடத்திற்கு சென்றதாக கூறப்படும் நேரம் மாலை 4.00 மணி என்றால் சரிதான். பாதிக்கப்பட்ட பெண்ணின் வாக்குமூலத்தின்படி அவர் சம்பவயிடத்திற்கு சென்ற நேரம் மாலை 3.30 மணி என்றால் சுமார் 3.30 மணி என்று கூறியுள்ளார். சாட்சி அகிலாவின் வாக்குமூலத்தின் படி சம்பவயிடத்திற்கு சென்ற நேரம் 3.00 மணி என்றால் சுமார் 3.00 மணி என கூறியுள்ளார். இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட பெண் பாலவாக்கம் கிராமத்தில் 100 நாட்கள் வேலையை முடித்து திரும்ப ஏரிக்கரை அருகில் வரும்பொழுது சம்பவம் நடந்ததா அல்லது அவர் சென்னாகாரணி கிராமம் வீட்டிற்கு வந்தபிறகு மீண்டும் ஏரிக்கரைக்கு சென்றபோது சம்பவம் நடந்ததா என்றால் அவர் வீட்டிலிருந்து ஏரிக்கரைக்கு சென்றபோது சம்பவம் நடந்தது. இந்த வழக்கில் நான் சாட்சிகளுக்கும் பாதிக்கப்பட்ட பெண்மணிக்கும் வழக்கு சம்பந்தமாக நீதித்துறை நடுவர் மூலமாக

இரகசிய வாக்குமூலம் நீதித்துறை நடுவரால் பதிவுசெய்வதற்கு விண்ணப்பம் கொடுத்து பதிவு செய்யப்பட்டதா என்றால் நான் வேண்டுகோள் கடிதம் கொடுத்து பதிவு செய்யப்பட்டது. வழக்கின் விசாரணையை கருத்தில் கொண்டு அந்த வாக்குமூலங்களை நான் வாங்கி வழக்கில் உள்ள முரண்பாடுகள் குறித்து சாட்சிகளிடம் மறுவாக்குமூலம் பதிவு செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த வாக்குமூலங்களை பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன். பாதிக்கப்பட்ட பெண் பூங்கொடியின் வாக்குமூலத்தில் சம்பவம் நடந்த நேரம் நன்பகல் 12.00 மணி என்று கூறியுள்ளார் என்றால் சரிதான். அவர் அந்த வாக்குமூலத்தில் அவருடைய கையையும், காலையும் புடவையால் வைத்து கட்டப்பட்டார் என்று குறிப்பிட்டு கூறியுள்ளார் அதுபோன்ற விவரம் எதுவும் அவருடைய 2 வாக்குமூலங்களிலும் இல்லை என்றால் சரிதான். நீதித்துறை நடுவர் முன்பு அளித்த வாக்குமூலத்தில் அவருடைய கழுத்து, இடுப்பு, கை, கால் ஆகிய இடங்களில் மிதிக்கப்பட்டதாக கூறியுள்ளார் என்ற விவரம் அவருடைய 2 வாக்குமூலங்களிலும் இல்லை என்றால் சரிதான். முகத்தில் குத்தினார் என்று மட்டும் கூறியுள்ளார். நீதித்துறை நடுவர் முன்பு அளித்த வாக்குமூலத்தில் கத்தியை வைத்து என் வாய், மார்பகம் அருகிலும், கழுத்து பின்புறம, என் சூத்து பின்னால் மற்றும் பெண்ணுறுப்பில் வெட்டினார் என்றும் பின்பு என் மீது படுத்துக்கொண்டு அவரது ஆணுறுப்பை என்னுடைய பெண்ணுறுப்பில் செலுத்தினார் என்று கூறிய வவிரம் அவருடைய 2 வாக்குமுலங்களில் இல்லை என்றால் சரியல்ல. அவர் எனது விசாரணையில் சின்ன கத்தியால் யூரின் போகும் இடத்தில் கிழித்துவிட்டதாகவும், என்னை புதரில் போட்டு என்மீது படுத்து வலுக்கட்டாயமாக உடலுறவு வைத்துக் கொண்டதாகவும் கூறியுள்ளார். சாட்சி தற்போது பாதிக்கப்பட்ட பெண்ணிடம் 09-01-2025 அன்று மறுவாக்குமூலம் பதிவு செய்ததாக கூறுகிறார். நான் மறுவாக்குமூலம் பதிவு செய்ததாக கூறவது தவறு என்றாலும் அகிலா மருத்துவமனையில் இருக்கும் போது 07-01-2025 அன்று மருத்துவமனைக்கு சென்று பாதிக்கப்பட்ட பெண்ணை விசாரணை செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பாதிக்கப்பட்ட பெண்ணின் மருத்துவ சிகிச்சைக்கு அழைத்து சென்று அனுமதிக்கப்பட்டபோது

அவருக்காக பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேட்டை நான் பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன். அந்த விபத்து பதிவேடு பதிவு செய்த மருத்துவர் வினோதினியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால் சரிதான். பாதிக்கப்பட்ட பெண் மற்றும் புகார் அளித்த அகிலா ஆகிய இருவரும் மருத்துவரிடம் அடையாளம் தெரியாத ஒருநபர் 06-01-2025 அன்று 4.00 மணியளவில் ஊத்துக்கோட்டை சென்னாகாரணி ஏரிக்கரையில் அவரை இழுத்து சென்று புதரில் வைத்து அவர் மீது படுத்து அவரை கம்பால் உடல் முழுவதும் தாக்கி அவரை கற்பழிக்க முயற்சி செய்ததாக கூறியுள்ளார் அதன்பின்னர் அங்கிருந்து பாதிக்கப்பட்ட பெண்ணை விட்டுவிட்டு ஓடிவிட்டார் அவரை அருகிலிருந்தவர்கள் மீட்டு உறவினர்களுக்கு தெரிவித்தார்கள் அதன் பொருட்டு பாதிக்கப்பட்ட பெண்மணி அவருடைய பிறப்புறுப்பிலிருந்து இரத்தபோக்கு காரணமாக மருத்துவ சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார் என்று கூறியுள்ளார் என்றால் சரிதான். அவருக்கு அளிக்கப்பட்ட மருத்துவ சிகிச்சையின்போது சாட்சி பூங்கொடி நீதித்துறை நடுவரிடம் வாக்குமூலம் அளித்தது போன்று கத்தியால் உடல் முழுவதும் 4 இடங்களில் தாக்கப்பட்டது போன்று உடல் முழுவதும் மிதிக்கப்பட்டது போன்றும், கை, கால்கள் கட்டப்பட்டது போன்றும் காயங்கள் இருந்ததாக அவருடைய விபத்து பதிவேட்டில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அவருக்கு ஏற்பட்ட காயம் குறித்து பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு மருத்தவ சிகிச்சை அளிக்கும்போது பாலியல் வழக்கு விசாரணை சம்பந்தமாக அறிக்கை ஒன்றை மருத்துவர் தயார் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த விசாரணை அறிக்கையில் பாதிக்கப்பட்ட பெண் 277 பெருமாள் கோவில் தெரு, சென்னாகாரணி கிராமத்தை சேர்ந்தவர் என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்படி விலாசம் சாட்சி அகிலாவின் விலாசம் என்றால் சரிதான். பாதிக்கப்பட்ட பெண் பாலவாக்கத்தை சேர்ந்தவர் கடந்த 30 வருடங்களாக தனது அக்கா மகள் அகிலாவுடன் சென்னாகாரணி கிராமத்தில் வசித்து வருகிறார். Column 16 ல் மருத்துவர் அவரிடம் அடையாளம் தெரியாத நபரால் 06-01-2025 மாலை 4.00 மணிக்கு பாலியல் தாக்குதலுக்கு பாதிக்கப்பட்ட பெண்மணி

உட்படுத்தப்பட்டதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். Column 27ல் IInd Degree Perinial Tear Vaginal Laceration என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த குறிப்பிட்ட காயம் அவருக்கு இருந்ததாக மருத்துவரின் விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சாட்சி தற்போது விபத்து பதிவேட்டில் Vaginal Laceration இருப்பது குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது என்று கூறுகிறார். பாதிக்கப்பட்ட பெண்மணியின் விபத்து பதிவேடும் பாலியல் குற்றத்திற்கான விசாரணை மேற்கொண்ட மருத்துவ பெண் அதிகாரி வினோதினியை தவிர்த்து உள்நோயாளியாக வைத்து மருத்துவ சிகிச்சை அளித்த மருத்துவர்கள் யாரையும் விசாரணை செய்து வாக்குமூலம் வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. அவரை உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு அவர் மருத்தவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டது சம்பந்தமான மருத்துவ ஆவணங்கள் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பாதிக்கப்பட்ட பெண்ணும், எதிரி ராஜாவும் ஒரே கிராமத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். நீதித்துறை நடுவரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் பாதிக்கப்பட்ட பெண்மணி ராஜா என்ற பெயர் குறிப்பிட்டுள்ள நபர் அவர் கிராமத்தை சேர்ந்த ராஜா அல்லது துரைசாமியின் மகன் ராஜா அல்லது செல்வராஜ் மகன் ராஜா அல்லது அவருக்கு ஏற்கனவே தெரிந்த ராஜா என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். பாதிக்கப்பட்ட பெண்மணி பட்டியில் இனத்தை சேர்ந்தவர் என்று தெரிந்தே பாலியல் தாக்குலுக்கு உள்ளாக்கப்பட்டார் என்ற விவரம் அ.சா.1ன் புகாரிலும், அ.சா.1, அ.சா.3 ஆகியோரின் வாக்குமூலங்களிலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு முகத்தில் கையில் குத்திய காயம் இருந்ததாக சாட்சி 1 நீலாவதியின் வாக்குமூலத்திலும், புகாரிலும் இல்லை என்றால் சரிதான். பாதிக்கப்பட்ட பெண்ணின் வாயைப்பொத்தி தூக்கி செல்லப்பட்டதாக எந்த விவரமும் அ.சா.1ன் புகாரிலும், அவருடைய வாக்குமூலத்தில் இல்லை என்றால் சரிதான். புதருக்கு தூக்கி சென்றதாக குறிப்பிட்டுள்ளார். சிறிய கத்தியால் யூரின் போகும் இடத்தில் பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு காயம் ஏற்படுத்தியதாக எந்த விவரமும் அ.சா.1ன் புகாரிலும், அவருடைய வாக்குமூலத்தில் இல்லை என்றால்

சரிதான். நீதித்துறை நடுவரிடம் அளித்த வாக்குமூலத்தில் பாதிக்கப்பட்ட பெண்மணி சம்பவயிடத்தில் சாட்சிகள் தினகரன், பிரகாஷ், விக்னேஷ் இருந்தது பற்றி எந்த விவரமும் கூறவில்லை என்றால் சரிதான். அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர் வாக்குமூலங்களிலும், புகாரிலும் மேற்படி சாட்சிகள் தினகரன், பிரகாஷ், விக்னேஷ் இருந்தது பற்றி எந்த விவரமும் இல்லை என்றால் சரியல்ல. பாதிக்கப்பட்ட பெண் கூறியுள்ளார். பூங்கொடியின் வாக்குமூலத்தில் சாட்சி ஏழுமலையிடம் பூங்கொடி என்பவர் அந்த பாவி கீழே தள்ளி கெடுத்துவிட்டான் என்று கூறியது போன்ற எந்த விவரமும் அவரது வாக்குமூலத்தில் இல்லை என்றால் சரிதான். பூங்கொடியின் முதலாவது வாக்குமூலத்தில் சம்பவயிடத்தில் இருந்த செல்போனை எதிரி எடுத்து சென்றதாக எந்த விவரமும் இல்லை என்றால் சரிதான். அவர் மயங்கிவிட்டதாக கூறினார். 09–01–2025 அன்று பதிவு செய்த வாக்குமூலத்தில் செல்போனை சம்பவயிடத்திலிருந்து எதிரி எடுத்துக் கொண்டார் என கூறியுள்ளார் என்றால் சரிதான். 09–01–2025 அன்று பதிவு செய்யப்பட்ட வாக்குமூலத்தில் சாட்சி பூங்கொடி 07–01–2025 அன்று நான் பதிவு செய்த வாக்குமூலத்தில் அவருக்கு ஏற்பட்ட அதிர்ச்சியால் மருத்துவரிடம் ராஜா பற்றி சொல்ல முடியவில்லை என்று அன்றைய தேதியில் 07–01–2025 மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது நான் விசாரித்தபோதும் அவரால் விவரமாக கூறமுடியவில்லை என கூறியுள்ளாரா என்றால் சரியல்ல. 07–01–2025 ல் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலத்தில் என்னால் விவரமாக சொல்ல முடியவில்லை என்று கூறியுள்ளார். இந்த வழக்கில் துரைசாமி மகன் ராஜா சம்பவத்தின்போது புதரிலிருந்து ஓடிச்சென்று மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு சென்றதாக ஏழுமலை பார்த்ததாக சொன்ன விவரம் அ.சா.1ன் வாக்குமூலத்தில் உள்ளதா என்றால் இல்லை. அ.சா.3 அகிலாவின் வாக்குமூலத்தில் எதிரியை பற்றி எந்த விவரமும் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் எதிரி சம்பவத்தில் ஈடுபட்டுள்ளார் என்ற விவரம் 07–01–2025 அன்று பிற்பகல் வரை என்னுடைய விசாரணையில் சாட்சிகள் யார் மூலமாக எனக்கு தெரியவந்தது என்றால் அன்று காலையில் பாதிக்கப்பட்ட பெண் அளித்த

வாக்குமூலம் மற்றும் சம்பவயிட சாட்சிகளின் விசாரணையிலிருந்தும் எதிரி சம்பவத்தில் ஈடுபட்டுள்ளார் என்று தெரியவந்தது. சாட்சிகள் யாரும் 07-01-2025 அன்று பிற்பகல் வரை எதிரியை பற்றி சந்தேகம் என்ற அளவில் கூட எந்த வாக்குமூலம் என்னிடத்தில் அளிக்கவில்லை என்றாலும் பாதிக்கப்பட்ட பெண்மணிக்கு 3 நாட்கள் கழித்து தான் மயக்கம் தெளிந்தது என்றும் நான் கூறியது போன்று பாதிக்கப்பட்ட பெண்மணி என்னிடத்தில் எதிரியை பற்றி சொல்லுவதற்கு வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. சம்பவயிடத்தில் பாதிக்கப்பட்ட பெண்ணை முதன் முதலாக பார்த்ததாக சொல்லப்படும் நபர் அ.சா.1 ன் புகாரின் படி சேகர் என்பவர் என்றால் சேகர் என்பவர் தகவல் கொடுத்துள்ளார் முதன் முதலாக பார்த்ததாக புகாரில் இல்லை. சாட்சி 1 நீலாவதியின் வாக்குமூலத்தில் சம்பவயிடத்தில் சேகர் தான் முதன் முதலாக பார்த்தது தகவல் கூறியதாக கூறியுள்ளார் என்றால் முதன் முதலாக பார்த்ததாக கூறவில்லை. பார்த்து தகவல் கூறியதாக கூறியுள்ளார். என் விசாரணையின் படி பாதிக்கப்பட்ட பெண்ணை முதன் முதலில் சம்பவயிடத்தில் பார்த்தது யார் என்றால் ஏழுமலை. ஏழுமலைக்கும் சேகருக்கும் சம்பவத்தில் ஈடுபட்ட நபரை பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான். ஆனால் அந்த நேரத்தில் அவர்கள் ஊரைச்சேர்ந்த துரைசாமி மகன் ராஜா என்பவர் புதரிலிருந்து வேகமாக ஓடிவந்து வழியில் நிறுத்தி வைத்திருந்த மோட்டார் சைக்கிளை எடுத்துசென்றதை பார்த்ததாக என்னிடம் வாக்குமூலம் அளித்துள்ளார். அந்த வாக்குமூல விவரங்களை ஏழுமலை குறிப்பிட்டு கூறியதாக அ.சா.1 நீலாவதி மற்றும் அ.சா.3 அகிலாவின் வாக்குமூலங்களில் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் எதிரியை கைது செய்வதற்கு தனிப்படை அமைத்தேன் என்றால் சரிதான். அந்த தனிப்படை அமைக்கப்பட்டது மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் செயல்நடைமுறை ஆணைகளின் படி எனக்கு வழங்கப்பட்ட தனி விசாரணை அதிகார அடிப்படையில் என்னால் நியமனம் செய்யப்பட்டார் என்ற விவரம் அதில் இல்லை என்றால் சரிதான். அமைக்கப்பட்ட தனிப்படை செல்போனின் விவரங்களின் அடிப்படையில் எதிரியை கைது செய்வதற்கு முயற்சி செய்தார்களா என்றால்

அதுபற்றி எனக்கு தெரியாது. 07-01-2025 அன்று பிற்பகல் 3.00 மணியளவில் எதிரியை கைது செய்வதற்காக செங்குன்றம் வனசரக அலுவலகம் அருகில் தனிப்படையினர் சென்றது பற்றி எனக்கு தகவல் தெரியுமா என்றால் தனிப்படையினர் சென்று எதிரியை பிடித்தது பற்றி எனக்கு தகவல் கூறினார்கள். நான் அவர்களோடு எதிரியை பிடிப்பதற்காக எதிரி கைது செய்யப்பட்ட இடத்திற்கு செல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் எதிரி நீதிமன்ற அடைப்பு காவலுக்கு அனுப்பியது நான் தான் என்றால் சரிதான். அந்த அடைப்பு காவல் அறிக்கையில் நானும், சம்பவயிடத்திற்கு சென்று எதிரி கைது செய்யப்பட்டபோது உடனிருந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அந்த இடத்தில் கைது செய்யும்போது எதிரி தப்பித்து ஓடியபோது அவருக்கு காயம் ஏற்பட்டு திருவள்ளூர் அரசு மருத்துவமனையில் அதன்பின்னர் தொடர்ச்சியாக சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் இடது காலில் காயத்திற்காக மருத்துவ சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டார் என்றால் சரிதான். சிகிச்சை முடிந்துஉடனே வந்துவிட்டார். அதுசம்பந்தமான விபத்து பதிவேடு ஆவணங்கள் எதையும் நான் இந்த வழக்கில் ஆவணங்களாக தாக்கல் செய்யவில்லை என்றால் ரிமாண்டின்போது கொடுத்தோம். அவ்வாறு கைது செய்யப்பட்ட நபர் இரவு 22.30 மணியளவில் என்னிடத்தில் ஒப்படைக்கப்பட்டார் என்றால் 22.00 மணியளவில் ஒப்படைக்கப்பட்டார். அவ்வாறு என்னிடம் கொண்டுவந்து ஒப்படைக்கப்படும் போது தேவராஜ் காவல் ஆய்வாளர் எதிரியை 07-01-2025 அன்று 22.15 மணிக்கு கைது செய்துள்ளோம் என்றால் சரிதான். அவ்வாறு கைது செய்யப்பட்ட இடத்திலிருந்து பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக அல்லது செல்போன் மற்றும் எதிரியின் வாகனம் கைப்பற்றப்பட்டு என்னிடத்தில் காவல் நிலையத்தில் தனிஅறிக்கை மூலமாக பொருட்கள் ஒப்படைக்கப்பட்டதாக எந்த விவரமும் இல்லை என்றால் சரிதான். நான் கைது செய்தபோது Remand Report – Column 8 ல் எதிரியிடமிருந்து பொருட்கள் எதுவும் கைப்பற்றப்பட்டதாக எந்த விவரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அன்றைய தினத்தில் எதிரிக்கு சொந்தமானதாக சொல்லப்படும் செல்போன் மற்றும் இருசக்கர வாகனம் பறிமுதல்

செய்யப்பட்டதற்காக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் என்னால் இரவு 22.30 மணிக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரியிடமிருந்து தான் LAVA Mobile Phone, வழக்கில் சம்பந்தப்பட்ட இருசக்கர வாகனமும் எதிரியால் ஒப்படைக்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த இருசக்கர வாகனம் காவல் நிலையத்திற்கு யாரால் கொண்டுவரப்பட்டது மற்றும் மொபைல்போன் யாரால் கொண்டுவரப்பட்டது என்ற விவரமும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் இல்லை என்றால் சரியல்ல. எதிரி செல்போனை எடுத்து ஆஜர் செய்ததாக ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இருசக்கர வாகனத்தை யார் காவல் நிலையத்தில் கொண்டுவந்த விவரத்தை ஒப்புதல் வாக்குமுலத்தில் கூறவில்லை தனிப்படையிலுள்ள காவலர்கள் கொண்டுவந்துள்ளார்கள். எதிரியை கைது செய்யும்போது திரேக சோதனை செய்து தான் கைது செய்யவேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு திரேக சோதனை செய்யப்பட்ட சமயத்தில் அவரிடமிருந்து செல்போன் கைப்பற்றப்பட்டதாக எந்த விவரமும் இல்லை என்றால் சரிதான். எதிரியால் ஒப்படைக்கப்பட்டதாக சொல்லப்படும் செல்போனின் எண் குறிப்பிடவில்லை என்றால் ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை. சம்பவத்தின் போது 4.00 மணியளவில் எதிரி மஞ்சுளா என்பவரின் வீட்டு அருகே வந்தபோது அவருக்கு கீழேவிழுந்து முகத்தில் காயம் ஏற்பட்டதாகவும், மோட்டார் சைக்கிளிலிருந்து கீழே விழுந்ததாகவும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அவர் சம்பவத்தன்று காலையிலிருந்து பல்வேறு இடங்களுக்கு தொடர்ச்சியாக சென்று பல இடங்களில் மது குடித்து இறுதியாக 12.30 மணியளவிலும், சுந்தரம் என்பவரின் ஷெட் அருகில் மது அருந்தியதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். அவருடன் மது அருந்தியதாக கூறப்படும் சரத் என்பவரை அல்லது அவர் விழுந்து கிடந்ததாக சொல்லப்படும் வீட்டின் உரிமையாளர் மஞ்சுளா என்பவரை விசாரித்து அவர்களிடத்திலிருந்து வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான். அவர்களை விசாரணை செய்தேன் வாக்குமூலம் கொடுக்க விரும்பவில்லை.

எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையிலான அந்த LAVA மொபைல் போனுக்கான Model No. LZX 417 என்று குறிப்பிட்டுஅதற்கான 2 IMEI Number குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதில் குறிப்பிட்டுள்ள இருசக்கர வாகனம் TN 20 CQ 8934 Bajaj Platina நிறம் கைப்பற்றுதல் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதனுடைய நிறம் பற்றி விவரம் ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இந்த பொருளை கைப்பற்றுதற்காக தான் அன்றைய தினம் சாட்சி கிராம நிர்வாக அதிகாரி ஞானவேல் என்பவரை அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு வரவழைத்தேன் என்றால் சரிதான். அவரை தவிர்த்து நான் தனிப்பட்ட சாட்சிகள் யாரையும் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளாக இருப்பதற்கு அழைக்கவில்லை என்றால் சரிதான். அவருடைய அழைக்கப்பட்ட மற்றொரு சாட்சி கிராம உதவியாளர் ரகு என்றால் சரிதான். அவர்கள் முன்னிலையில் பதிவுசெய்யப்பட்டதாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் ஆஜர் எதிரி அவரை அழைத்து சென்றால் அவரது வீட்டில் மறைத்து வைத்திருந்த அவர் அணிந்திருந்த ஆடைகளை அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்வதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி எதிரியின் வீட்டு விலாசம் 659, காவனூர் தெரு, சென்னாகாரணி கிராமம் என்றால் சரிதான். நான் கைது செய்த எதிரியின் கைது நமுனாவில் எதிரியின் வீட்டு விலாசம் 6/9, காவனூர் தெரு, சென்னாகாரணி கிராமம் என்று Column 6 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி அடையாளம் காட்டியதாக கூறப்படும் அவருடைய வீட்டில் 08-01-2025 அன்று அதிகாலை சோதனைக்கு சென்றேன் என்றால் சரிதான். அவருடைய வீட்டிற்கு பின்புறம் மறைத்து வைத்திருந்தார். அவ்வாறு நான் அவர் வீட்டிற்கு சோதனைக்கு செல்வதற்கு முன்பு நீதிமன்றத்தில் சோதனை முன்அறிவிப்பு கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. அவ்வாறு சோதனை செய்வதற்காக தான் கிராம நிர்வாக அதிகாரியை வழக்கில் சாட்சியாக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான. கிராம நிர்வாக அதிகாரிக்கு சாட்சியாக இருக்க காவல் துறை மூலம்

சம்மன் அனுப்பியுள்ளேனா என்றால் இல்லை. அந்த சமயத்தில் கிராம நிர்வாக அதிகாரி ஞானவேல் சென்னாகாரணி கிராமத்தில் தங்கியிருந்தாரா என்றால் தங்கியிருந்தார். என் அழைப்பின் பேரில் தான்சென்னாகாரணி கிராமத்திலிருந்து காவல் நிலையத்திற்கு வந்தார் என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்படும்போது அதில் குறிப்பிட்டிருக்கும் சாட்சிகளே அந்த வாக்குமூலத்தில் விவரம் கண்ட பொருட்களை கைப்பற்றுவது சம்பந்தமாக தொடர் சாட்சியாக இருக்க கூடாது என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் சாட்சி ஞானவேல் மற்றும் ரகு ஆகிய இருவர் மட்டுமே ஒப்புதல்வாக்குமூல சாட்சிகளாகவும், வழக்கு சொத்து கைப்பற்றுதல் சாட்சியாகவும், தொடர்ச்சியாக உடன் இருந்துள்ளார் என்றால் சரிதான். எதிரியின் ஆடைகளை கைப்பற்றும்போது நான், கிராம நிர்வாக அதிகாரி, என்னுடைய உதவி காவல் அதிகாரிகள் தமிழ்செல்வி, தேவராஜ் ஆகிய அனைவரும் ஒன்றாக சென்றோமா என்றால் இல்லை. 2 வண்டிகளில் சென்றோம். நான் ஜீப்பில் சென்றேன். கிராம நிர்வாக அதிகாரி மற்றும் கிராம உதவியாளர் இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். நான் பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் இடத்திற்கு சுமார் எவ்வளவு நேரம் கழித்து கிராம நிர்வாக அதிகாரி மற்றும் கிராம உதவியாளர் வந்தார்கள் என்றால் எங்களுக்கு பின் 5 நிமிடத்தில் வந்துவிட்டார்கள். அவர்கள் வரும்வரை காத்திருந்தோம். அந்த நேரத்தில் கிராமத்தை சேர்ந்த நபர்கள் யாரையும் பொருட்களை கைப்பற்றி சாட்சியாக இருக்கும்படி யாரையும் கேட்கவில்லை என்றால் சரிதான். மகஜர் படி பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் விலாசம் 659, காவனூர் தெரு என்றால் சரிதான். 6/9 காவனூர் தெரு என்று கைது நமுனாவில் குறிப்பிட்டுள்ளது போன்று விலாசம் என்று சொன்னால் தவறு 659 என்று உள்ளது. இந்த வழக்கில் நான் இறுதி அறிக்கை தாக்கல் செய்யும்போது மொத்தம் 3 பொருட்கள், 2 செல்போன்களும், ஒரு இருசக்கர வாகனமும் கைப்பற்றப்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அதில் முதலாவது காலத்தில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் செல்போன் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது IMEI Number உட்பட கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும்

இடம் யாரிடமிருந்து கைப்பற்றப்பட்டது என்ற விவரத்தில் எதிரி ராஜாவிடமிருந்து 6/9 காவனூர் தெரு, சென்னாகாரணி கிராமத்தில் கைப்பற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் 2 ஆவதாக குறிப்பிடப்பட்டுள்ள மொபைல் போன் அதே விலாசத்தில் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக குறிப்பிடப்படப்பட்டுள்ளது என்றால்சரிதான். அதில் 3 ஆவதாககுறிப்பிடப்பட்டுள்ள இருசக்கர வாகனம் அதே விலாசத்தில் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக குறிப்பிடப்படப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் எதிரியின் செல்போன் பயன்பாட்டை உறுதி செய்வதற்காக Nodal Officer மணிமாறன் என்பவருக்கு நான் வேண்டுகோள் விண்ணப்ப கடிதம் 06-02-2025 அன்று அனுப்பியுள்ளேன் என்றால் Nodal Officer, Bharathi Airtel க்கு 2, 3 முறை Cyber Cell, திருவள்ளூர் மாவட்டம் மூலமாக அனுப்பி வைத்தேன். அவரிடமிருந்து நான் இந்த வழக்கு சம்பந்தப்பட்ட CDR, CAF பெற்றுள்ளேன் என்றால் சரிதான். 19-06-2025 அன்று இந்த வழக்கில் நான் விசாரணையை முடித்து இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் 19-02-2025 அன்று இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன். இறுதி அறிக்கை தாக்கல் செய்த பின்னர் தான் 19-06-2025 அன்று Airtel Nodal Officer மூலமாக நான் கேட்ட சான்றும் CAF மற்றும் CDR விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த விவரங்கள் பெறுவதற்கு முன்பே நான் இறுதி அறிக்கையை 19-02-2025 அன்று தாக்கல் செய்துவிட்டதால் அவரை நான் இந்த வழக்கில் சாடசியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அ தன் பின்பு கூடுதலாக CDR & CAF விவரத்தை தாக்கல் செய்ய தனிஅறிக்கை கொடுத்துள்ளளேனா என்றால் தனிஅறிக்கை கொடுக்கவில்லை கூடுதல் சாட்சியம் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அவ்வாறு நீதிமன்றத்தில் அதனை தாக்கல் செய்வதற்கு முன்பு எனக்கு வழங்கப்பட்ட CDR விவரங்களை வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தான செல்போனுடன் ஒத்துப்போகிறதா என்றும் அது எதிரியால் பயன்படுத்தப்பட்டதா என்பது போன்ற விவரங்களை சரிபார்த்தேனா என்றால் சரிபார்த்தேன். அதில் குறிப்பிடப்பட்டுள்ள CAF விவரங்கள் அதன்

பயன்பாட்டாளருடைய விவரங்கள் ராஜா த/பெ. செல்வராஜ் என்று வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அதிலுள்ள புகைப்படம் எதிரி ராஜாவினுடையது. அந்த புகைப்படம் ராஜாவினுடையது தான் என்று தடயஅறிவியல் துறைக்கு அனுப்பி சரிபார்த்தேனா என்றால் இல்லை. அந்த பயன்பாட்டாளருக்கான ஆதார் அடையாள அட்டையில் ராஜா த/பெ. செல்வராஜ், 6/9 சென்னாகாரணி கிராமம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் ஆதார் எண் எதிரி ராஜாவின் ஆதார் எண் ஆகும். அவருடைய ஆதார் அடையாள எண்ணை வைத்து பயோமெட்ரிக்கில் அவருடைய விவரங்களை சரிபார்த்தாமோ என்றால்இல்லை. இந்த வழக்கில் சம்பந்தப்பட்டதாக சொல்லப்படும் நபர் ராஜா த/பெ. துரைசாமி எண், 659, சென்னாகாரணி கிராமம் என்றால் சரியல்ல. ராஜா த/ பெ. துரைசாமி என்பது மட்டும் சரி. Revenue Record ன் படி 6/9, என்பது சரி. மேலும் அவரது ஆதார் அட்டையில் எதிரியின் Initial D என குறிப்பிடப்பட்டுள்ளது. Revenue Record ஏதாவது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வட்டாட்சியர் அளித்த சாதி சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம். சம்பவத்திற்கு பிறகு அது எங்களால் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட வழக்கு செல்போனுக்கும் நான் Nodal அதிகாரியிடமிருந்து வாங்கி தாக்கல் செய்த CDR ல் குறிப்பிடப்பட்டிருக்கும் போனுக்கும் நேரடிய தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் குறிப்பிட்டிருக்கும் செல்போன் 06-01-2025 அன்று பிற்பகல் 14.59 மணிக்கும், அதற்கு முன்பதாக 13.54 மணிக்கும் சென்னாகாரணி கிராமத்தை தாண்டி வேறு ஒரு செல்போன் டவருடன் இணைக்கப்பட்டிருந்தது அந்த செல்போன் மீண்டும் மாலை 18.48 மணிக்கு தான் சென்னாகாரணி தொலைதொடர்பு கோபுரத்திற்கு உள்ளே பயன்பாட்டில் இருந்துள்ளது என்றால் சிலநேரம் அந்த இடங்களில் டவர் இல்லாமல் இருக்கும்போது மற்றொரு டவர் பயன்பாட்டிற்கு வரும். 14.59 க்கான டவர் ஏர்டெல்லுக்கான டவர் கிடையாது என்றாலும் சென்னாகாரணி டவர்கி டையாது என்றாலும் அது ரிலையன்ஸ் Jio Info Company ltd என்ற வெளியில் உள்ள டவருக்கு சம்பந்தப்பட்டது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. இந்த

வழக்கில் சாட்சியாக குறிப்பிடப்பட்டிருக்கும் சாட்சி விக்னேஷ் அவருடைய வாக்குமூலத்தில் அவர் மட்டும் பகல் 3.00 மணிக்கு சென்னாகாரணி ஏரிக்கரைக்கு அருகில் உள்ள நிலத்திற்கு மோட்டார் சைக்கிளில் சென்றதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சுமார் 3.30 மணிக்கு சென்றதாக குறிப்பிட்டுள்ளார். சம்பவம் நடந்த அதே தேதியில் மாலை 4.00 மணிக்கு அவர் பார்க்கும்போது ராஜா மஞ்சளா வீட்டிற்கு அருகில் வளைவில் விழுந்திருந்தார் என்று கூறியுள்ளார் என்றால் சரிதான். எதிரியின் செல்போன் தேடிக்கொண்டு சென்றபோது அவர் ஊர் ஏரிக்கு போகும் வழியோரம் அவரது செல்போன் இருந்தது என்று கூறியுள்ளார் என்றால் சரியல்ல. அவர் பாத்ரூம் போன இடமான எங்கள் ஊர் ஏரிக்கு போகும் வழியோரம் உள்ள புதர் பக்கத்தில் அவரது செல்போன் இருந்தது என்று கூறியுள்ளார். ஆனால் நீதித்துறை நடுவருக்கு முன்பதாக கூறிய வாக்குமூலத்தில் அவர், தினகரன், பிரகாஷ் பிற்பகல் 3.00 மணிக்கு ஏரிக்கரைக்கு சென்று செல்போன் கண்டுபிடித்ததாக எந்த விவரமும் கூறவில்லை என்றால் சரியல்ல. செல்போன் இருந்ததாக கூறியுள்ளார். அந்த இடத்திற்கு நடுவரின் வாக்குமூலத்தில் பிரகாஷ், தினகரன் ஆகியோருடன் சென்று செல்போனை கண்டுபிடித்தாக கூறியுள்ளாரா என்றால் சரிதான். அவர்களுக்கு சம்பவயிடத்தில் பாதிக்கப்படட பெண்ணை பார்த்ததாக சொல்லப்படும் ஏழுமலை அவருடைய வாக்குமூலத்தில் செல்போன் இருந்தது குறித்து எந்த வாக்குமூலம் கூறவில்லை என்றால் சரிதான். அதே சாட்சி விக்னேஷ் சம்பவயிடத்திற்கு 4 பேர் சென்றதாக போலீசார் வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரியல்ல. விக்னேஷ் போனிலிருந்து மிஸ்டு கால்கொடுத்து சம்பவயிடத்திற்கு சென்றதாக கூறியுள்ளார்கள். CDR ல் மிஸ்டுகால் பதிவாகவில்லைன் எறால் CDR ல் மிஸ்டு கால் பதிவாகாது. பறிமுதல் செய்யப்பட்ட செல்போனில் Missed call பதிவாகியிருக்கும் என்றால் சரிதான். விக்னேஷ் சொன்ன அந்த விவரம் சரியா என்பதை கைப்பற்றப்படடதாக சொல்லப்படும் செல்போனிலிருந்து விவரம் சேகரித்து சரிபார்க்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி செல்போன் விவரங்களை அழித்து வைத்திருந்தார். அதுபோன்ற விவரங்கள் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ளதா என்றால் இல்லை. அழிக்கப்பட்ட

விவரங்களை மீட்டெடுப்பதற்கு தடயஅறிவியல் துறையில் வதசிகள் உள்ளது என்றால் சரிதான். அதன்மூலம் விவரங்களை சரிபார்க்கவில்லை என்றால் சரிதான். சாட்சி தினகரன் நீதித்துறை நடுவரிடம் அளித்த வாக்குமூலத்தில் கூறியது போலீஸ் வாக்குமூலத்தில் இல்லை என்றால் சரிதான். செல்போனை பொறுத்தவரை தினகரனுடைய சாட்சியம் கேள்விபட்ட சாட்சியம் என்றால் சரிதான். நீதித்துறை நடுவரிடம் தினகரன் கூறியது போன்று விக்னேஷ் சம்பவயிடத்திலிருந்து போனை எடுத்து ராஜாவிடம் கொடுத்தார் என்றும் அதை ராஜா வாங்கி இடுப்பில் வை த்ததை தினகரன் பார்த்துதாக அவரது வாக்மூலத்தில்இ ல்லை என்றால் சரிதான். தினகரனின் வாக்குமூலத்தில் அங்கிருந்தவர்கள் ராஜா தினேஷூடன் வந்து செல்போன் எடுத்துக்கொண்டு சென்றதாகவும் ராஜா தான் கெடுத்துவிட்டதாக சொன்னதாகவும் கூறியுள்ளார் என்றால் சரிதான். தினகரனுக்கு போலீசாரின் வாக்குமூலத்தின் படி செல்போன் பற்றிய விவரம் சம்பவம் பற்றிய விவரம் நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல.

**நேரம் 18.45 மணி**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.